DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C C. No. 07/2025 |
| Deposition of witness | : | P. W – 1 |
| Name | : | தனம் |
| Father's /Husband Name | : | ரவி |
| Village | : | மாப்பிள்ளைக்குப்பம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 62 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day August 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நன்னிலம் ஆற்றங்கரைத்தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். எங்கள் வீட்டிற்கும், ஆஜர் எதிரி வீட்டிற்கும் எதிரே சிவில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 19.07.2024 –ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு ஆஜர் எதிரி எங்களது பிரச்சனைக்கு உரிய இடத்தில் மண்ணை கொண்டு வந்து கொட்டினார். அதற்கு நான் ஏன் எங்கள் இடத்தில் கொட்டுகிறீர்கள் என்று கேட்டேன் அதற்கு ஆஜர் எதிரி அப்படிதான் கொட்டுவேன் என்று குச்சிகாரி மவனே, தேவுடியா மவளே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு திட்டியதால் எனக்கு மன உளைச்சல் ஆனது. மன்வெட்டி காம்பால் ஆஜர் எதிரி எனது தலையில் அடித்தார். அதில் எனக்கு ரத்த காயம் ஏற்பட்டது. அதில் எனக்கு மருத்துவமனையில் 13 தையல்கள் போட்டார்கள். (சாட்சி தனது காயத்தை காண்பித்து சாட்சியமளிக்கிறார்.) தடுக்க வந்த எனது கணவரை ஆஜர் எதிரி மண்வெட்டி காம்பால் அவரது உடம்பில் அடித்தார். அவ்வாறு ஆஜர் எதிரி அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டு மண்வெட்டி காம்பை காண்பித்து உங்கள் எல்லோரையும் காலி செய்துவிடுவேன் என்ற மிரட்டினார். அவ்வாறு ஆஜர் எதிரி என்னை மிரட்டியதால் எனக்கு தற்போது வரை மிகவும் பயமாக இருக்கிறது. (சாட்சி அழுதுகொண்டே சாட்சிமளிக்கிறார்) எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம்.

அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் மருத்துவமனையில் தொடர்ந்து 30 நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் கொடுத்த புகாரில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**– இல்லை –**

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 19:04:24 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C C. No. 07/2025 |
| Deposition of witness | : | P. W – 2 |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | தங்கராசு |
| Village | : | மாப்பிள்ளைக்குப்பம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 63 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day August 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நன்னிலம் ஆற்றங்கரைத்தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். அ.சா.1 எனது மனைவி. எங்கள் வீட்டிற்கும், ஆஜர் எதிரி வீட்டிற்கும் எதிரே இடம் பிரச்சனை தொடர்பாக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 19.07.2024 –ம் தேதி காலை 09.30 மணிக்கு ஆஜர் எதிரி எங்களது பிரச்சனைக்கு உரிய இடத்தில் மண்ணை கொண்டு வந்து கொட்டினார். அந்த மண்ணை பிரச்சனைக்கு உரிய இடத்தில் கொட்டக்கூடாது என்று எனது மனைவி தனம் ஆஜர் எதிரியிடம் கூறினார். அதற்கு ஆஜர் எதிரி அப்படிதான் கொட்டுவேன் என்று குச்சிகாரி மகளே, தேவுடியா மகளே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு திட்டியபிறகு ஆஜர் எதிரி மண்வெட்டி காம்பால் எனது மனைவி தலையில் அடித்தார். அதில் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் 13 தையல்கள் போட்டார்கள். பிறகு அதை கேட்ட என்னையும் ஆஜர் எதிரி குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு திட்டியதால் எனக்கு மிகவும் அவமானம் ஏற்பட்டது. அவ்வாறு திட்டிய பிறகு ஆஜர் எதிரி மண்வெட்டி காம்பால் என்னை நெஞ்சில் அடித்து காயப்படுத்தினார். அவ்வாறு காயப்படுத்திய பிறகு மண்வெட்டி காம்பை காண்பித்து உங்கள் எல்லோரையும் கொன்று காலி செய்துவிடுவேன் என்று மிரட்டினார். அவ்வாறு ஆஜர் எதிரி என்னை மிரட்டியதால் எனக்கு உயிர் பயம்

ஏற்பட்டது. பின்னர் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். அது தொடர்பாக நன்னிலம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**– இல்லை –**

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 19:04:36 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C C. No. 07/2025 |
| Deposition of witness | : | P. W – 3 |
| Name | : | பிரபாகர் |
| Father's /Husband Name | : | நாகராஜன் |
| Village | : | பூந்தோட்டம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 44 |
| Occupation | : | கடை வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day August 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது பூந்தோட்டம் வீராவாடியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2–ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் அ.சா.1, அ.சா.2 வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் அ.சா.1, 2 வீட்டிற்கும் இடம் தொடர்பாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 19.07.2024–ம் தேதி நான் அ.சா.1 வீட்டிற்கு வந்திருந்தேன். அன்று காலை 09.30 மணியளவில் ஆஜர் எதிரி பிரச்சனைக்கு உரிய இடத்தில் மண்ணை கொட்டிக்கொண்டிருந்தார். அதைப்பற்றி அ.சா.1 ஆஜர் எதிரியிடம் கேட்டார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1–ஐ பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அதன்பிறகு ஆஜர் எதிரி தன் கையில் வைத்திருந்த மண்வெட்டி காம்பால் அ.சா.1 ன் தலையில் அடித்தார். அவ்வாறு அ.சா.1 –ன் தலையில் அடித்ததில் அ.சா.1 தலையில் ரத்த காயம் ஏற்பட்டது. பின்னர், அ.சா.2 ரவி ஆஜர் எதிரியை தடுத்தபோது அவரையும் அதே மண்வெட்டி காம்பால் ஆஜர் எதிரி அ.சா.2–ன் தலை, தோள்பட்டை, மார்பு ஆகியவற்றில் அடித்தார். ஆஜர் எதிரி மண்வெட்டி காம்பை காண்பித்து அ.சா.1, அ.சா.2–ஐ பார்த்து உங்களை உயிருடன் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்னர் காயம்பட் அ.சா.1, அ.சா.2–ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தேன். இது சம்பந்தமாக நன்னிலம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

– இல்லை –

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 19:04:45 +0530